# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 54/2018**

Prosecution witness : **2**

| | | | |
|---|---|---|---|
| Name: | அருண்குமார் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused absent. Petition U/s 355 BNSS filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.09.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மதுரை மாநகர், தெப்பக்குளம் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 01.08.2017 ம் தேதி சார்பு ஆய்வாளர்-சாப்டுர் காவல்நிலையம் பொறுப்பு - சேடபட்ட காவல்நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது எனக்கு தொலைபேசி மூலமாக கிடைத்த ரகசிய தகவலினை பேரையூர் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கும் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்து, பொதுநாட்குறிப்பில் 10.20 மணிக்கு பதிவு செய்தேன். பின்னர் கஞ்சா என்ற போதைப்பொருள் சம்பந்தமான தக்க உபகரணங்களுடன் காவல் வாகனத்தில் தலைமைக்காவலர்கள்-கிருஷ்ணன் மற்றும் அப்துல ரகீம்சேட் ஆகியோர்களுடன் சம்பவ இடம் சென்று கண்காணிக்க அந்த இடத்தில் வெள்ளை நிற சாக்குப்பையுடன் நின்றிருந்த ஒரு ஆண் நபர்

போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து, என்னையும் என்னுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்து கொண்டோம். அவரைப்பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் மாயாண்டி என்றும் த/பெ. முனியாண்டி என்றும் அவர் ஊர் சேடபட்டி என்றும் தகவல் சொன்னார். அவரிடம் தங்களிடம் இருக்கும் வெள்ளை நிற சாக்குப்பையில் கஞ்சா என்ற போதைப்பொருள் இருப்பதாக சந்தேகிக்கிறோம். ஆகையினார் அவரை சோதனையிட அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ, அரசு பதிவிதழ் பெற்ற அதிகாரியிடமோ அழைத்துச்சென்று சோதனையிட அவருக்கு உள்ள உரிமையை எடுத்துக்கூறினோம். அங்கெல்லாம் செல்ல விருப்பமில்லை எனவும் போலீஸ் அதிகாரியாகியாகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அதன் பின்னர் 10.45 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து தனி நபர் சாட்சிம் அளிக்க அழைத்தும் யாரும் முன் வராததால் அதில் மாயாண்டியிடமும், என்னுடன் வந்த போலீஸ் கிருஷ்ணன், அப்துல் ரகீம்சேட் ஆகியோரிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். பின்னர் 11.00 மணிக்கு மாயாண்டி என்பவர் தானாக முன் வந்து எந்த ஒரு ஆசை வார்த்தையோ, அச்சுறுத்தலோ ஏதுவும் இன்றி கொடுத்த வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 11.10 மணிக்கு மாயாண்டி ஆஜர் செய்த கஞ்சாவை நாங்கள் எடுத்து சென்ற தராசில் நிறுத்துப்பார்க்க அது 3 கிலோ எடை கொண்ட கஞ்சா இருந்தது. அதிலிருந்து பகுப்பாய்விற்காகவும், மாதிரிக்காவும் 100 கிராம் கஞ்சாவினை எடுத்து தலா 50 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்களாக காக்கி நிறப்பேப்பரில் மடித்து, நூலால் சுற்றிக்கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்து அதில் முழுவதும் நிறப்பப்படாத சிலிப் விபரங்கள் ஒட்டி அதில் மாயாண்டியிடமும், என்னுடன் வந்த தலைமைக்காவலர்கள் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். அதற்கு S1, S2 என குறியீடு செய்தேன். மீதம் உள்ள 2 கிலோ 900 கிராம் கஞ்சாவினை அதே வெள்ளை நிற

சாக்குப்பையில் நூலால் சுற்றிக்கட்டி, போலீஸ்பட்டன் சீல் வைத்து விபரங்கள் அடங்கிய சிலிப் ஒட்டி, அதற்கு P1 என குறியீடு செய்தேன். அதன் பின்னர் மாயாண்டியை கஞ்சா என்ற போதைப்பொருள் சட்ட விரோதமாக, சுயலாபத்திற்காகவும் வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்து 11.30 மணிக்கு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 154/2017, சட்டப்பிரிவு 8(C) r/w 20(b)(ii)(B)NDPS ACT என வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவிற்கு படிவம் -91 தயார் செய்து முழுவதும் நிரப்பப்படாமல் S1, S2 என குறியீடு செய்யப்பட்டிருந்த கஞ்சா பொட்டலத்தில் ஒட்டப்பட்டிருந்த லேபிளில் குற்ற எண், சட்டப்பிரிவு அடங்கிய விபரங்களை பூர்த்தி செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் படிவம்-91 ஆகியவற்றை எதிரியுடன் நீதிமன்றத்திற்கு தக்க வழிக்காவல் மூலம் அனுப்பி வைத்தேன். பின்னர் என்னுடன் வந்த தலைமைக்காவலர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்குக்கோப்பினை காவல் ஆய்வாளர்- பேரையூர் வட்டம் அவர்களுக்கு மேல்விசாரணைக்காக அனுப்பி வைத்தேன். காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 4** ஆகும். படிவம்-91 **அ.சா.ஆ.5** ஆகும். S1, S2 என குறியீடு செய்யப்பட்டு பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சாப்பொட்டலங்கள் **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆகும். P1 என குறியீடு செய்யப்பட்ட மீதம் உள்ள கஞ்சா **சா.பொ.3** ஆகும்.

**எதிரி வழக்கறிஞர் ஆஜர். சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**